பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**15 02 2026** **6 45**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கும் திட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஒப்புதல் அளித்துள்ளார்.

**2.** இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் ஜவுளித் துறைக்கு உத்வேகம் அளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

**3.** தமிழகத்தில் திமுக ஆட்சியின் நலத்திட்டங்களால் ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது ஒரு வகையில் பயனடைந்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

**4.** ஊழல் முறைகேடுகளை மூடி மறைப்பதற்காக திமுக அரசு முன்கூட்டியே மகளிருக்கு உரிமைத் தொகையை தந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

**5.** உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சாலை விபத்துகளில் பாதிக்கப்படுபவர்களுக்கு உடனடி மற்றும் உறுதியான சிகிச்சை அளிக்கும் வகையில், பிரதமரின் ராஹத் என்ற புதிய திட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ், எந்த வகையான சாலையில் விபத்து ஏற்பட்டாலும், தகுதியுள்ள ஒவ்வொரு நபருக்கும் விபத்து நடந்த தேதியிலிருந்து ஏழு நாட்கள் வரை, ஒரு லட்சத்து **50** ஆயிரம் ரூபாய் வரை ரொக்கமில்லா சிகிச்சை வழங்கப்பட உள்ளது.

சாலை விபத்திற்குப் பிறகு உடனடி மருத்துவ உதவி கிடைக்காத காரணத்தால் எந்த உயிரும் இழக்கப்படக் கூடாது என்பதில் அரசு உறுதியாக இருப்பதை இந்த முடிவு அடிக்கோடிட்டுக் காட்டுவதாகச் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகளுக்கான சிகிச்சைச் செலவுகள் 'மோட்டார் வாகன விபத்து நிதியத்தின்' மூலம் ஈடுசெய்யப்படும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

புது தில்லியில் உள்ள சேவா தீர்த்தத்தில் நேற்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், குடிமக்களுக்கு முதலிடம் அளிக்கும் அரசின் அணுகுமுறையை வெளிப்படுத்துவதோடு, உயிர்களைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாகும் என்று அந்த அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் இந்தியாவின் ஜவுளித் துறைக்கு ஒரு புதிய வளர்ச்சி அத்தியாயத்தைத் தொடங்கும் என்று மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் 113.76 பில்லியன் டாலர் மதிப்புள்ள அமெரிக்கச் சந்தைகளை இந்தியா எளிதாக அணுக முடியும் என்றும், முக்கிய வரி குறைப்புகள் காரணமாக நமது ஏற்றுமதித் திறன் சர்வதேச அளவில் பெரும் முன்னேற்றம் அடையும் என்றும் சமூக வலைதளத்தில் அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக, ஆயத்த ஆடைகள், தரைவிரிப்புகள் மற்றும் ஜவுளிப் பிரிவுகள் இந்த ஒப்பந்தத்தால் மிக வேகமான வளர்ச்சியை எட்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் தலைமையின் கீழ் எட்டப்பட்டுள்ள இந்த மிக முக்கியமான மைல்கல், இந்தியாவை உலகளாவிய ஜவுளித் துறையின் அதிகார மையமாக மாற்றுவதோடு, வளர்ச்சியடைந்த இந்தியா நோக்கிய நமது பயணத்தை மேலும் வலுப்படுத்தும் என்றும் திரு. ஜோஷி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

மஹா சிவராத்திரியை முன்னிட்டு இன்று தமிழகம் முழுவதும் சிவாலயங்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற உள்ளன.

மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற சிவன் கோயில்களில் பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சிவபெருமானை பக்தி சிரத்தையுடன் வழிபட்டு வருகின்றனர்.

தஞ்சை பெரிய கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், சிதம்பரம் நடராஜர் கோவில் மற்றும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் உள்ளிட்ட முக்கிய தலங்களில் மகாசிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவராத்திரியை முன்னிட்டு ராமேஸ்வரம் அக்னி தீர்த்த கடற்கரையில் இன்று காலை முதல் பக்தர்கள் புனித நீராடி வருகிறார்கள்.

நாட்டில் உள்ள 12 ஜோதிலிங்க தலங்களில் ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாத சுவாமி திருக்கோவிலும் ஒன்று என்பதால் வட மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் இங்கு குவிந்துள்ளனர்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சியின் நலத்திட்டங்களால் ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது ஒரு வகையில் பயனடைந்துள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

கோவையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நலத்திட்டங்களை முன்னிறுத்தி திமுகவின் தேர்தல் பிரச்சாரம் அமையும் என்று கூறினார்.

மகளிர் உரிமைத் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம், உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கான நான் முதல்வன் திட்டம், சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத திட்டம் உள்ளிட்டவற்றால் ஏராளமானோர் பயனடைந்துள்ளதாக கூறினார்.

நலத்திட்டங்கள் மக்களுக்கு எந்த தடையும் இல்லாமல் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாநில அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் மீனவர்களுக்கு சிறு கடன் வழங்க ‘‘வெண் அலைகள்’’ என்ற கைப்பேசி செயலியை மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

வாணியன்சாவடியில் உள்ள மீன்வள பல்கலைக்கழக கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கான கூட்டுக் குழுக் கூட்டத்தில் இது அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த செயலியின் மூலம் மின்னணு பரிவர்த்தனை வாயிலாக கடன் வழங்கப்படும் என்று மீன்வளத்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு ஊழல் முறைகேடுகளை மூடி மறைப்பதற்காக முன்கூட்டியே மகளிருக்கு உரிமைத் தொகையை தந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

கோவையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகளிர் உரிமைத் தொகையை தடுக்க சிலர் முயற்சிப்பதாக முதலமைச்சர் ஆதாரமில்லாத தகவலை தெரிவித்திருப்பதாக கூறினார்.

திமுக அரசின் மோசமான செயல்பாடுகளால் பெண்கள் கோபத்தில் உள்ளதாகவும், மகளிர் உரிமைத் தொகையை எவ்வளவு உயர்த்திக் கொடுத்தாலும் திமுகவிற்கு அவர்கள் வாக்களிக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பு சட்டத்தால் நியமிக்கப்பட்ட ஆளுநரை மாநில அரசு தொடர்ந்து புறக்கணிப்பது சரியல்ல என்றும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<>>>>

தமிழக அரசின் வனத்துறை சார்பாக ஆண்டுதோறும் பறவைகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டம் கூடலூர் வனக்கோட்டத்தில் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு நேற்று தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Saravanan — 50 Sec)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

அமெரிக்கா - ஈரான் இடையே அணுசக்தி தொடர்பான பேச்சுவார்த்தை நாளை மறுநாள் ஜெனிவாவில் நடைபெற உள்ளது.

-------------

மியான்மரில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவையில் 3 புள்ளி 2ஆக பதிவானது.

-------------

மணிப்பூரில் 2 பெண் தீவிரவாதிகள் உட்பட 6 தீவிரவாதிகளை மத்திய ரிசர்வ் காவல்படையினர் நேற்று கைது செய்தனர்.

-------------

இந்தியன் வங்கியின் சார்பில் இணையவழி குற்றங்கள் தடுப்பு விழிப்புணர்வு நடைபயணம் நேற்று காஞ்சிபுரத்தில் நடைபெற்றது.

-------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் 167 பயனாளிகளுக்கு 2 கோடியே 39 லட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களை மாநில அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா நேற்று வழங்கினார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் பெத்தாசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சாலை விபத்தில் உயிரிழந்ததையடுத்து, அவரது உடல் உறுப்புகள் அரசு மருத்துவமனைக்கு தானம் செய்யப்பட்டது.

-------------

காட்பாடி ரயில் பராமரிப்பு பணிமனையில் பொறியியல் பணி காரணமாக அரக்கோணம் - ஜோலார்பேட் இடையே இன்றிரவு 9.30 மணி முதல் நாளை அதிகாலை 3.30 மணி வரை ரயில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

-------------

அரக்கோணம் - காட்பாடி இடையே இன்றிரவு 9 மணிக்கு இயக்கப்படும் ரயில், பராமரிப்பு பணி காரணமாக சேவூர் - காட்பாடி இடையே மட்டும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

-------------

திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் நேற்றிரவு நடைபெற்ற சனி பிரதோஷ வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

-------------

சென்னையில் வீடுகளில் இருந்து சுமார் 46 டன் பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி கொழும்புவில் இரவு மணிக்கு தொடங்க உள்ளது.

-------------

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் தொடர் இன்று தொடங்குகிறது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் ஆட்டம் பிற்பகல் மணி 1.45க்கு சிட்னியில் தொடங்குகிறது.

இந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற உள்ள மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு முன்னதாக நடைபெறும் இந்தப் போட்டி இந்திய அணிக்கு நல்ல பயிற்சி களமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பகான் அணி 2-0 என்ற கோல் கணக்கில் கேரள அணியை வென்றது.

கோவா - காசி அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் **1-1** என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

**<<<<The End>>>>**